பதிவு எண் | | | | | | |

பன்னிரண்டாம் வகுப்பு பகுதி I - பொதுத் தமிழ்

Language – part I – TAMIL

கால அளவு : 2:30 மணி நேரம்] [ மதிப்பெண்: 90

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பெருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்......
   அ) நன்னூல் ஆ) அகத்தியம்
   இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்
3. *பொய்யா வானம்* புதுப்பெயல் பொழிந்தென - கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு.
   அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர்
   இ) இடைச்சொல்தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. "உவா உற வந்து கூடும்/ உடுபதி, இரவி ஒத்தார்" - யார் ? யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
   இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
5. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
6. "வையகமும் வானகமும் ஆற்றலரிது" - எதற்கு ?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
7. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
8. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடையது சொல் ?
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
9. கன்னிமாரா நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு
   அ) 1869 ஆ) 1812 இ) 2010 ஈ)1860
10. உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு
    அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு
    இ) முரண்பண்பு ஈ) இவையனைத்தும்


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

11. "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது ?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

12. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13. உழாஅது - இலக்கணக்குறிப்பு தருக

அ) சொல்லிசையளபெடை ஆ) பண்புத்தொகை

இ) இன்னிசையளபெடை ஈ) செய்யுளிசையளபெடை

14. தாழ்கடல் - இலக்கணக்குறிப்பு தருக

அ) வினைத்தொகை ஆ) இடைக்குறை

இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

## பகுதி -II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 2 = 6

15. சினத்தை ஏன் காக்க வேண்டும் ?
16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
17. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தின் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
18. "இடையீடு" எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 2 = 4

19. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7 x 2 = 14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?

23. கலை, களை, கழை (மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக)

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக

அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

ஆ) ஐப்பசி அடமழையில் ஊருனி நிறைந்தது

25. பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்து முறையான தொடராக்கு

அ) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுக்கள் குவிந்தன.

ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

26. உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக

அ) கிணற்றுத் தவளை போல ஆ) தாமரை இலை நீர் போல


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ) நம் வாழ்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) கண்டான் ஆ) தந்தனன்

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக

அ) புதுப்பெயல் ஆ) ஒருமையுடன்

30. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை ?

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

32. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

35. கலை முழுமை என்றால் என்ன ?

36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கமாக எழுதுக.

37. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 4 = 12

39. ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கி வரைக.

40. வாகைத் திணையை சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார். (அல்லது)

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை<br>குறுந்தொகை<br>ஐங்குறுநூறு<br>அகநானூறு<br>கலித்தொகை | புறநானூறு<br>பதிற்றுப்பத்து | பரிபாடல் |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு<br>முல்லைப்பாட்டு<br>நெடுநல்வாடை<br>பட்டினப்பாலை | மதுரைக்காஞ்சி<br>திருமுருகாற்றுப்படை<br>பொருநராற்றுப்படை<br>பெரும்பாணாற்றுப்படை<br>சிறுபாணாற்றுப்படை<br>கூத்தராற்றுப்படை |

## பகுதி - IV

3 x 6 = 18

44. அ) கவிதை எழுத வேண்டுவனாவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க (அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) பண்டையக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. (அல்லது)

ஆ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46. அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4 + 2 = 6

அ) வையகம் எனத்தொடங்கும் நெடுநல்வாடை பாடலை எழுதுக

ஆ) வரும் என்று முடியும் திருக்குறளை எழுதுக.

************************ வாழிய வளர்செந்தமிழ் ***************************


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com